சேலம் கிழக்கு திமுக அலுவலகத்தில் பொது உறுப்பினர் கூட்டம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் கழக முதன்மை செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு , மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி, மத்திய மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜேந்திரன் எம்எல்ஏ, நாகப்பட்டினம் மாவட்ட செயலாளர் கௌதம், தருமபுரி மாவட்ட செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பழனியப்பன், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் ரிஷிவந்தியம் கார்த்திகேயன், கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், எம்.பி.பார்த்திபன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், முன்னாள் மேயர் ரேகா பிரியதர்ஷினி, பொதுக் குழு உறுப்பினர் மலர் விழி, சந்திரமோகன், முத்துலிங்கம், மனோகரன், சோமசுந்தரம், சங்கர், கோபால், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர், மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி , சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், சார்பு அணி நிர்வாகிகள் முனைவர் அ.சீனிவாசன் ,ப்ரண்ட்ஸ் ரமேஷ் ,வரத.ராஜசேகரன், திருநாவுக்கரசு, சேகர் , அருண், தனசேகரன், ராஜவேல், சாந்தி, பாரதி ஜெயக்குமார், பேரூர் செயலாளர்கள் முருகப் பிரகாஷ், பாலமுருகன், ரவிக்குமார், சண்முகம், முருகேசன், செல்வம்,பாபு, செல்வராஜ், வெங்கடேசன், வெங்கடேஷ்வரன், வேல், சரவணன், காங்கமுத்து, சுப்பிரமணி, மற்றும் மாவட்ட ,ஒன்றிய, நகர ,பேரூர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

திருப்பூர் - வாவிபாளையம் சாலை பாளையக்காட்டில்

ரூ.48.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சாலை மேம்பாலம் !

அமைச்சர்கள் எ.வ.வேலு - மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர் !

திருப்பூர், டிச.18-

திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் - வாவிபாளையம் சாலை பாளையக்காட்டில் நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் அலகின் சார்பில் ரூ.48.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சாலை மேம்பாலத்தை 15.12.2023 வெள்ளிக்கிழமை அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (நெடுஞ்சாலைத்துறை) பிரதீப் யாதவ் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர், க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தனர்,

திருப்பூர் மாநகருக்குள் திருப்பூர் - வாவிபாளையம் சாலையில் கி.மீ0/2 யில் இருப்பு பாதை கடவு எண் 132 அமைந்துள்ளது. (இரயில்வே கி.மீ 440/2628) பதிலாக திருப்பூர் ஊத்துக்குளி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கி.மீ440/810 ல் இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. ஒரு நாளில் சுமார் 78 முறை இக்கடவு மூடப்படுவதால், இச்சாலையில் செல்லக்கூடிய வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதால் ஏற்படுகின்ற நெரிசலை தவிர்பதற்காக இம்மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மேம்பாலத்தின் நீளம் 524.918 மீட்டர், அகலம் 12.00 மீட்டர், இரயில்வே பகுதியில் 24.918 நீளம் கொண்ட கான்கிரீட் ஓடுதளம், நெடுஞ்சாலைப் பகுதியில் 15 மீட்டர் நீளத்தில் 31 கான்கிரீட் ஓடுதளங்கள், 35 மீட்டர் நீளத்தில் ஒரு கான்கிரீட் ஓடுதளம் என இப்பாலம் கட்டப்பட்டுள்ளது. ஊத்துக்குளி சாலையிலிருந்து புதிய பேருந்து நிலையம் மற்றும் பெருமாநல்லூர் சாலைக்கு செல்லும் வாகனங்கள் தற்போது இரயில் நிலையம், புஷ்பா திரையரங்கம் மற்றும் 60 அடி சாலை வழியாக செல்வதால் பயணத்தூரமும், கால விரையமும் ஏற்படுகிறது. இதற்கு பதிலாக வாகனங்கள் கடவை எண் 132க்கு மாற்றாக அமைக்கப்பட்டுள்ள இரயிலவே மேம்பாலம் மற்றும் மாநகராட்சி சாலைகள் கொங்கு நகர் பிரதான சாலை வழியாக சென்றால் சுமார் 3 கி.மீட்டர் தூரம் குறைவதுடன் நேரமும் சேமிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராஜ். நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சந்திரசேகர், தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மா.முருகேசன், தேசிய நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் இரா.கீதா, திருப்பூர் மாநகராட்சி 2ம் மண்டலத் தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.செந்தில்குமார், வெ.ராதாகிருஷ்ணன், வடக்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சு.முத்துக்குமார், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர்கள் யு.பழனியப்பன் (நபார்டு மற்றும் கிராமசாலைகள்), இரா.சரவணன் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), வளர்மதி (தேசிய நெடுஞ்சாலைகள்), எம்.சரவணன் (திட்டங்கள்), கோட்டப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) முருகேசன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

விடைத்தாள்கள் திருத்தும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளது!

குரூப்-2 தேர்வு முடிவுகள் - ஜனவரி 12-ஆம் தேதி வெளியிடப்படும்!

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிப்பு!

சென்னை, டிச.19–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி II தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் காலதாமதம் உள்ளதாகக் குறிப்பிட்டு வெளியான செய்திகள் குறித்து பின்வரும் விவரங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றன.

15.12.2022 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேர்வாணைய ஆண்டுத்திட்டம், 2023–ஆம் ஆண்டில் 15.03.2023 அன்று மேம்படுத்தப்பட்டு தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தேர்வாணைய ஆண்டுத் திட்டத்தின்படி 2023–ஆம் ஆண்டு அறிவிக்கை வெளியிடப்பட்ட அனைத்து தேர்வுகளும் (14 தேர்வுகள்) நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தேர்வுகளில் 20 இலட்சம் தேர்வர்கள் (தோராயமாக) கலந்து கொண்டுள்ளனர். தேர்வாணைய ஆண்டுத் திட்டத் தின்படி தேர்வுகள் நடத்தப்படுவதோடு 32 தேர்வுகளுக்கான (நடப்பாண்டில் அறிவிக்கப்பட்ட 9 தேர்வுகள் உட்பட) தேர்வு முடிவுகளை தேர்வாணையம் வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்ட முடிவுகளின் படி, தோராயமாக 12,500 தேர்வர்கள் பல்வேறு அரசுப் பதவிகளுக்கான வேலை வாய்ப்பினை இந்த ஆண்டு பெற்றுள்ளனர்.

தொகுதி II முதன்மை எழுத்துத் தேர்வு தொடர்பாக அதிக அளவிலான தேர்வர்களின் விடைத்தாட் கள் மதிப்பீடு செய்யும் பணிகள் இருந்ததாலும், மேலும், ஒரேநேரத்தில்மதிப்பீடுசெய்யவேண்டியதேர்வுகள்மற்றும்பிறதேர்வுகள் நடத்தவேண்டியிருந்ததாலும், தொகுதி 11 முதன்மை எழுத்துத்தேர்வு தொடர்பான தேர்வு முடிவுகள் தேர்வாணைய அட்டவணையில் டிசம்பர் 2023 இல் வெளியிடப்படுவதாக ஏற்கனவே தற்காலிகத் தெரிவு முடிவு அட்டவணை (Tentative Result Declaration Schedule) குறித்த அட்டவணையில் அறிவிக்கப்பட் டது.

தேர்வு முடிவுகளை விரைந்து வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன், தொகுதி II முதன்மை எழுத்துத் தேர்வு விடைத்தாட் களை மதிப்பீடு செய்யும் பணிகள் துரிதமாக (விடு முறை நாட்கள் உட்பட) நடைபெற்று வருகிறது. ஒரே சமயத்தில் பல தேர்வுகள் நடத்தவேண்டிய சூழ்நிலையாலும் மற்றும் சமீபத்திய புயல் வெள்ளம் காரணமாக விடைத்தாள் கள் திருத்தும் பணிக்கு தற்போது கூடுதல் காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய சவால்கள் இருந்த போதிலும், தொகுதி II தேர்வின் தேர்வு முடிவுகள் ஜனவரி 12 ஆம் தேதியில் வெளியிடப்படும். எனவே, விண்ணப்பதாரர் கள் தொகுதி II தேர்வு தொடர்பாக பரப்பப்பட்டு வரும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மங்களநாடு ஊராட்சியில் பணியில் ஈடுபட்டிருந்த தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணியாளர்களிடம் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் முன்னிலையில் 16.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் -

உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டுமானப் பணிகள்!

அமைச்சர் எ.வ.வேலு - அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் பார்வையிட்டார்!

நீலகிரி, டிச.19-

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் முன்னிலையில் பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளையும், அறுவைச் சிகிச்சை பிரிவு, ஆய்வகங்கள், மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள், விடுதியில் குடிநீர் வசதி, மின்சாரம் மற்றும் சமையல் கூடங்களை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் 16.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் படி, கடந்த 3 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த சாலை உட்டகட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ.358 கோடி மதிப்பீட்டில் 272 பணிகள் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 202 பணிகள் நடைபெற்று முடிந்துள்ளது. மீதமுள்ள 70 பணிகள் நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கனமழை பாதிப்புகளால் மண் சரிவு ஏற்படுகிறது. ஆகவே, சாலையின் ஓரங்களில் நிரந்தர தடுப்புச் சுவர் கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளது. புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மண் ஆணி பொருத்தி மண்சரிவை கட்டுப்படுத்தும் முறையின் மூலம் உதகை, கோத்தகிரி மேட்டுப்பாளையம் சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலையில் சோதனை முறையில் ஏற்படுத்தியதன் மூலம் கடந்த இரண்டு ஆண்டு பருவமழையை தாங்கி நிலைத்துள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் உதகை கோத்தகிரி மேட்டுப்பாளையம் சாலை, கேத்தி பாலாடா சேலாஸ் சாலை, உதகை அவலாஞ்சி குந்தா சாலை, குன்னூர் கட்டபெட்டு சாலை ஆகிய 6 இடங்களில் ரூ.2 கோடி மதிப்பில் மண் ஆணி பொருத்தி மண் சரிவை கட்டுப்படுத்தும் புதிய தொழில் நுட்ப பணி விரைவில் துவங்கப்படவுள்ளது.

மேலும், கோத்தகிரி பகுதியில் 23.11.2023 அன்று பெய்த கனமழையால் 8 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, நெடுஞ்சாலைத் துறையின் துரித மீட்பு நடவடிக்கையால் 9 மணி நேரத்தில் சாலை சீர்செய்யப்பட்டு வாகனங்கள் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்தவேண்டும் என்று ஆலோசனை மேற்கொண்டதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், இந்திய தொழில்நுட்ப வல்லுநர்கள், ஐஐடி பேராசிரியர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நெடுஞ்சாலைத் துறை, வனத்துறை, வருவாய்த்துறை அலுவலர்கள் உள்ளிட்ட 5 துறைச்சார்ந்த அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் சாலையை செப்பனிடு வது என முடிவு செய்யப்பட்டது. குழுவின் பரிந்துரையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிரந்தர தீர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரி பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. கட்டுமான பணிகள் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மண் சரிவை தடுக்கும் வகையில் ஒரு கட்டிடத்திற்கும் மற்றொரு கட்டிடத்திற்கு இடையே கான்கிரீட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு குடிநீர் வசதி ஏற்படுத்த, தற்போது கிணறு அமைத்து அதன் மூலம் நாளொன்றுக்கு 1.60 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது.

குடிநீர் வசதிக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த ஒரு நாளைக்கு 2 இலட்சம் லிட்டர் தண்ணீர் காமராஜர் அணையிலிருந்து கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுமான பணிகள் நிறைவு பெற்றவுடன் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர், சின்ன குன்னூர் முதல் எப்பநாடு வரை கிராம சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ், ரூ.7 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலை விரிவுபடுத்தப்படும் பணியினையும், அதன் தரத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்த்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சத்தியமூர்த்தி, தொழில்நுட்ப சிறப்பு அலுவலர் விஸ்வநாத், தலைமைப் பொறியாளர் காசிலிங்கம், சிறப்பு தலைமைப் பொறியாளர் சத்தியவாணீஸ்வரன், நபார்டு மற்றும் கிராம சாலைச் சாலைகள் தலைமைப் பொறியாளர் முருகேசன் (சென்னை), நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் பழனியப்பன் (சேலம்), அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. கீதாஞ்சலி, இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ஜெயலலிதா, நெடுஞ்சாலைத்துறை முதன்மை பொறியாளர்கள் சந்திரசேகர், திருமதி.கீதா, முருகேசன், கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர்கள் குழந்தைராஜ் (உதகை), விஸ்வநாதன் (கோவை), உதவிக் கோட்டப்பொறியாளர் குருமூர்த்தி (மேட்டுப்பாளையம்), உதவிப் பொறியாளர் பிரசாந்த், தரக்கட்டுப்பாட்டு பிரிவு கோட்டப்பொறியாளர் தங்கராஜ் (கோவை) பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் அய்யாசாமி, மணிசேகரன், ராஜ்குமார், உதகை நகர மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தர்மபுரி தொப்பூர் கணவாய் பகுதியில்

விபத்தை தடுக்க ரூ.775 கோடியில் சாலை சீரமைப்பு பணி !

மருத்துவர் டி.என்.வி. செந்தில்குமார் எம்.பி.தகவல்!

தருமபுரி, டிச.19-

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு கடந்த 2019 ஆம் ஆண்டு தொப்பூர் கணவாய் பகுதியில் நடைபெறும் விபத்துக்களை தடுக்க மாற்றுப் பாதை அமைத்து விபத்துக்களை தடுக்க கோரிக்கை மனுவை நிதின் கட்கரி அவர்களிடம் வழங்கி இருந்தேன்.

அதன் தொடர் நடவடிக்கையாக 2020 ஆம் ஆண்டு நினைவூட்டல் கடிதமும் 2021 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் விதி 377 கோரிக்கை வைத்திருந்தேன்.

2022ஆம் ஆண்டு தொடக்கத்தில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது தொடர் வலியுறுத்தல் காரணமாக ஒன்றிய அரசு 775 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்க ஒன்றிய அரசு டெண்டர் கோரி உள்ளது. இச்சாலை அமைக்கப்பட்டால் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புக்கள் பெருமளவு குறையும். இச்சாலையை பொதுமக்கள் பயன்படுத்தும் நேரமும் குறையும். இத்திட்டம் தருமபுரி மாவட்ட மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பலன்.

இந்தியாவிலேயே தொப்பூர் கணவாய் பகுதியில் தான் அதிக விபத்துக்கள் நடைபெறும் என்ற நிலை மாறும். தருமபுரி நாடாளுமன்ற தொகுதியில் எங்கு சென்றாலும் நான்கு வழி சாலை உள்ளது பெங்களூர் செல்ல இரண்டு புதிய வழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

தருமபுரி நாடாளுமன்ற தொகுதிக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளை விட அதிகமான போக்குவரத்துக்கு மற்றும் விவசாயத்திற்கு தண்ணீர் தேவைக்கு அதிக நிதியை பெற்று தந்திருக்கிறோம். ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் இரண்டாம் அலகு திட்டத்திற்கு 7800 கோடி நிதியில் ஒன்றிய அரசிடம் இருந்து நான்காயிரம் கோடியும் ஜிக்கா விடம் மீத தொகையும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தர்மபுரி தொகுதி மக்கள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் தருமபுரி செயலாக்கத்திற்கு வந்துள்ளதாக தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு திட்டமான மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார் அதன்படி நாமக்கல் மாவட்டம் நாமக்கல் நகராட்சியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சுமன் கோட்டாட்சியர் சரவணன், நகர் மன்ற தலைவர் து. கலாநிதி, நகர கழக செயலாளர்கள் பூபதி, ராணா ஆனந்த், சிவகுமார், ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.